கழக தலைவர் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

# சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



சென்னை, ஆக.7-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி இன்று (07.08.26 வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணியளவில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெறும் அமைதிப் பேரணியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்குமாறு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழக அரசியலிலும், தமிழ் இலக்கியத்திலும், சமூக நீதிப் போராட்டத்திலும் அழியாத முத்திரையைப் பதித்த முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்க்கை, இடையறாத உழைப்பிற்கும் மக்களுக்கான அர்ப்பணிப்பிற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சிறுவயதிலேயே சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்ட கலைஞர், எழுத்தை ஆயுதமாகவும், அரசியலை மக்களின் முன்னேற்றத்திற்கான கருவியாகவும் பயன்படுத்தினார். நாடகம், திரைப்படம், இலக்கியம், பத்திரிகை, சட்டமன்றம் என அவர் பதித்த தடம் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாததாகும்.

தமிழ்மொழியின் செம்மொழி அங்கீகாரம், சமூக நீதி மற்றும் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளின் வலுப்படுத்தல், பெண்களின் உரிமை மேம்பாடு, விவசாயம், கல்வி, தொழில் வளர்ச்சி, சாலை, பாலம், குடிநீர், நகர்ப்புற மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியவர் கலைஞர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக பொதுவாழ்வில் மக்கள் நலனுக்காக அயராது உழைத்த அவர், “ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்” என்ற தன் வாழ்வியல் தத்துவத்தை வாழ்ந்து காட்டிய தலைவர்.

அவரது நினைவு நாள் என்பது வெறும் அஞ்சலி செலுத்தும் நாளாக அல்ல; சமூக நீதி, சமத்துவம், பகுத்தறிவு, தமிழ்ப்பற்று மற்றும் மக்கள் நல ஆட்சியின் இலட்சியங்களை மீண்டும் உறுதிமொழியாக ஏற்கும் நாளாகும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் உழைப்பும், தொலைநோக்கு சிந்தனையும், மக்கள் நலச் சாதனைகளும் தலைமுறைகளைத் தொடர்ந்து வழிநடத்தும் ஒளிவிளக்காக என்றும் நிலைத்திருக்கும் புகழ் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் தலைமையில் இன்று (07.8.26) காலை 8.00 மணியளவில் சென்னை அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் திருவுருவச் சிலை முன்பிருந்து தொடங்கி கலைஞர் நினைவிடம் வரை நடைபெறவுள்ள அமைதி பேரணியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினர் சரியாக காலை 7:00 மணி அளவில் வருகை தந்து பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்! எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்

# சைதை மேற்குப் பகுதியில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஆக.7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதியில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 1000 பேருக்கு அறுசுவை உணவினை மாவட்டக் கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், வழங்கிய ஆலோசனையின்படி ஆகஸ்டு 7: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கழக தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி: சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலைஇலக்கியப் பகுத்தறிவுப்பேரவை துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன், ஆகியோர் முன்னிலையில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் இன்று (07.08.2026 வெள்ளிக்கிழமை) நண்பகல் 12 மணியளவில், 1000 பேருக்கு அறுசுவை உணவினை சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, த.மணி, ஆர்.எல்.காந்தன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஆர்.கிருஷ்ணகுமார், எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், ஆட்டோதியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில்ஸ்ரீதர், கேபிள்காளி, தீ. ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், என்.தீனதயாளன், அ.தமீம்அன்சாரி, வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், வெ. கிஷோர்குமார், ஆர்.துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர்.ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், கவிதமிழ்வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஜிம் க.பிரபு, ஆர்.எஸ்.ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில் எஸ்.மணி, ஆட்டோஜான், சார்புசரவணன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி.குமார், பூ. பாஸ்கர், த.ஜெயராமன், ஆர்.தனசேகரன், எஸ்.கோகுல்குமார், வழக்கறிஞர் மாரியப்பன், விவேக்செல்வம், மருத்துவர்கள் ஆர்.துரைராஜ், ஜீவபிரபாகரன், தகவல் தொழில்நுட்ப அணியின் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆர்.ரோகேஷ், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் சி.நிர்மல்குமார், சுரேஷ், எழிலரசி, உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள் அனைத்து அணிகளை சார்ந்த பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

## தலைமை : ஜேம்ஸ் தேவதாசன்! சிறப்புரை: அலிசேக் மீரான்!

மும்பை, ஆக. 7-

தமிழரின்முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட முதுபெரும் தமிழறிஞரும் இனத்தின் அடையாளமாய், மொழியின் எழுச்சியாய் நிருவாகத்தின் அறிவூற்றாய் வாழ்ந்தவரும், மேனாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு பாண்டுப் பிரைட் மேனிலைப்பள்ளியில் வைத்து புறநகர மாநிலத் தி.மு கழகப் பொறுப்புக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசன் தலைமையில் இன்று (07-08-2026 வெள்ளிக் கிழமை ) மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது.



சைதை மேற்கு பகுதி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி மாவட்ட கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் டி.என்.சிவமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளரும், மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும், ஆகஸ்டு 7 முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு புகழஞ்சலி குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிகழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், பெருந்திரளாக பங்கேற்றனர்.

மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் நினைவேந்தல் நிகழ்வுச் சிறப்புரை ஆற்றவுள்ளார். பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், வதிலை பிரதாபன், அ. இளங்கோ, ந.வசந்தகுமார், வே.சதானந்தன், ஜைனுல் லாபுதீன், வீரை சோ பாபு, மெஹபூப் பாஷா, சிவக்குமார் சுந்தர்ராஜ், சிலுவை தாசன் ஆகியோர் நினைவேந்த லுரை ஆற்றவுள்ளார்கள்.

புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்துக் கிளைக் கழகங்களின் நிருவாகிகளும் கழக உணர்வாளர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு கலைஞருக்குப் புகழஞ்சலி செலுத்தவுள்ளார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரும் மேனாள் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை 05-08-2026 புதன்கிழமை நடைபெறவிருந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் பங்கேற்க விடாமல் தடுக்கும் எண்ணத்திலும் பழி வாங்கும் நோக்கத்திலும் கைது செய்தமைக்காக மும்பை புறநகர் மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகத் தமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

# வாழாமல் வாழுவீர் - வையந்தான் ஆளுவீர்!



ஓயாத உழைப்பாலே
உயர்ந்தவரே! எப்போதும்
தேயாத நிலவாகத்
திகழ்பவரே! கீழ்வானில்
தீயாக எழுகின்ற
செங்கதிரே! ஒருநாளும்
சாயாத நெடுமலையாய்த்
தாங்குபவர்; அரசியலில்
ஈயாகக் கொசுவாக
எத்தனையோ பேரிங்கே
நோயாகக் கிடக்கையில்
நோன்பிருந்த தமிழ்நாட்டின்
சேயாகப் பிறந்தவரே
திக்காளச் சிறந்தவரே!

எழுத்தாலும் பேச்சாலும்
இயக்கத்தை வளர்த்தவரே!
அழுத்தமாய் மக்களிடம்
ஆலமரம் ஆக்கினீர்
விழுதூன்றி உயர்ந்தோங்கி
விண்ணளாவப் பரந்துமிகச்
செழித்திடச் செய்தவரே,
செருவென்ற மூவேந்தர்
வழியிலே வந்தவரே,
வற்றாத காவிரி
வழிந்தோடப் போராடி
வாகையும் சூடியவர்!
கழிசடைகள் பலவின்று
கைகொட்டி ஆர்ப்பரித்துப்
பழிகூறித் திரிந்தாலும்
பலவெற்றி இராசராசன்
விழிநெருப்பில் பகைவர்கள்
வெறுஞ்சாம்பல் ஆனதுபோல்
அழிவார்கள்,பொய்கூறி
ஆளுவோர் ஒழிவார்கள்!

வளர்ந்தவர்கள் உம்மாலே
வாளெடுத்து எதிர்த்தாலும்
தளர்ந்திடா நெஞ்சுமக்கு;
தன்மான மிடுக்குமக்கு!
கிளர்ந்தவரை வீழ்த்தியே
கிழித்தெறிந்து விட்டவரே!

அளந்தறியா ஆற்றலுடன்
அரசியலில் எண்பதாண்டு
களங்கண்டு நின்றவரே!
கழகமின்று நிலைப்பதற்குத்
தளபதியைத் தந்தவரே,

தறுகண்மை உதயநிதி
இளந்தலை முறையினர்க்கு
எழுச்சிதர வைத்தவரே!

வளம்பெருகித் தமிழ்நாடு
வையத்தில் சிறப்பதற்கு
உளங்கொண்டு போராடி
உரிமையை நிலைநாட்டி
விளங்கிய கலைஞரே!
வேந்தர்க்கும் வேந்தரே!

அண்ணாவின் மறைவாலே
அடியற்றுப் போகுமிந்த
மண்ணாளும் கழகமென
மனப்பாலைக் குடித்தவர்கள்
எண்ணத்தில் மண்விழ
இமயம்போல் நிறுத்தியே
விண்ணுயரச் செய்தவரே!
வெற்றிகள் கொய்தவரே!
அண்ணாந்து மலைத்திட
ஆற்றலைப் பெய்தவரே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

நீரில்லா அரசியல்
நீரில்லா ஆறென
ஊரெல்லாம் சொன்னதோர்
உண்மையினும்
உண்மையாம்!

காரில்லா வானில்லை
அலையில்லாக் கடலில்லை
ஏரில்லா உழவில்லை
இலையில்லா மரமில்லை
கூரில்லா வேலில்லை
கோலில்லா அரசில்லை
நாரில்லா மாலையில்லை
நரம்பில்லா யாழில்லை
யாரில்லா திருந்தாலும்
யாவுமறி கலைஞரே
நீரில்லா அரசியல் நிழலில்லா
மரமே! உம்
பேர்சொல்லா அரசியல்
பெரும்பாலைத் தரிசியல்!

போராடி வளர்ந்தவரே
புகழ்எய்தி வாழ்பவரே
ஈரோடு பெரியாரும்
எழிற்காஞ்சி அண்ணாவும்
ஊரோடு ஊராக
ஓயாமல் செய்தபணி
வேரோடு வேராக
விளைந்தவரே, எப்போதும்
சீரோடு இருந்தவரே
சிறையோடு இணைந்தவரே
பேரோடும் உயர்ந்தவரே
பிறர்துயர் உணர்ந்தவரே
நேரோடும் எண்ணந்தான்
நெஞ்சிலே உமக்கென்றும்!
தேரோடும் திருவாரூர்த்
தெருவைப்போல் அகன்றமனம்
நீரோடும் காவிரிபோல்
நெஞ்சுவக்க அறிவுமணம்!

ஓயாமல் உழைத்ததனால்
உறங்கத்தான் கடலோரம்
போயங்குப் படுத்ததாய்ப்
புகலுதல் சரியாமோ?
மாயாமல் மக்களுளம்
வாழ்கின்ற அண்ணாவின்
தேயாமல் எழுகின்ற
செம்மொழி கேட்பதற்குச்
சாயாமல் சாய்ந்தீரோ?
தவழ்உதய சூரியன்
காயாமல் காய்வதனைக்
காண்பதற்குப் போனீரோ?
ஞாயிறவர் அண்ணாவின்
நற்றுணையாய்ச் சென்றீரோ?
வேயாமல் கூரையாய்
விளங்குகிற வானின்கீழ்
வாழாமல் வாழுவீர்;
வையந்தான் ஆளுவீர்!

நீட் எதிர்ப்பு கூட்டியக்கத்தின் சார்பில்

# தொடர் உண்ணாவிரதம் இருந்த ரவி உடல் நலக்குறைவு!

## கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி. வீரமணி நலம் விசாரித்தார்!



சென்னை, ஆக. 7-

நீட் எதிர்ப்பு கூட்டியக்கத்தின் சார்பில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தோழர் ரவி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்ததலின் பேரில் மாவட்ட அமைப்பாளர்கள் அருண், சரவணன் ஏற்பாட்டில் கழக மாணவர் அணிச் செயலாளர் வீரமணி சந்தித்து நலம் விசாரித்தார்.

மேலும் எங்களின் முழு ஆதரவையும் ஒற்றுமையையும் தெரிவித்ததோடு நீட் எதிர்ப்பு என்பது ஒரு தனிநபரின் போராட்டமல்ல; தமிழ்நாட்டின் சமூகநீதிக்கான மக்களின் உரிமைக் குரல். அந்தக் குரலை ஒலிக்கச் செய்யும் தோழமைகளுக்கும், ஜனநாயக இயக்கங்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருக்கும்.

சமூகநீதிக்கான போராட்டம் தொடரும்! நீட் எதிர்ப்பு குரல் ஓயாது ஒலிக்கும்! என்றும் கூறினார்.

இந்நிகழ்வின்போது நீட் போராளி மறைந்த அனிதாவின் அண்ணன் மணிரத்னம் உடனிருந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளையொட்டி

# திருப்பத்தூர் நகரில் இன்று அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜ் அறிக்கை!



திருப்பத்தூர், ஆக. 7-

திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் புதன்கிழமை வாணியம்பாடியிலுள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி கலந்துகொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களை கைது செய்த நடிகர் விஜயின் த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டனங்களை தெரிவித்தும் பேசினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலியொட்டி (7-8-2026 வெள்ளிக்கிழமை) வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுமென்றும்,

திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி முதல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை வரை 7-8-2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் அமைதிப் பேரணியாக சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதால் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை ஓங்கிட செய்திடுவோம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.